**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை,நவம்பர்-2017
# Term Examination, November - 2017

| சித்திரக்கலை | தரம் :- 13 (2018) | புள்ளித்திட்டங்கள் |
|---|---|---|

**சித்திரக்கலைபள்ளித்திட்டம் - 13(2018)**

வினாப்பத்திரம் (சித்திரக்கலைI) - 100 புள்ளிகள்

(சித்திரக்கலைII) - 100 புள்ளிகள்

(சித்திரக்கலைIII) - 100 புள்ளிகள்

மொத்தம் 300 புள்ளிகள்

இறுதிப்புள்ளி = 300 ÷ 3

= 100 புள்ளிகள்

சித்திரக்கலைI-பகுதிI - 40 புள்ளிகள்

பகுதிII- அ - 20 புள்ளிகள்

ஆ - 20 புள்ளிகள்

இ - 20 புள்ளிகள்

மொத்தம் - 100 புள்ளிகள்

**பகுதி Iக்கானவிடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 11) 4 | 21) 3 | 31) 2 |
| 2) 3 | 12) 4 | 22) 2 | 32) 5 |
| 3) 2 | 13) 2 | 23) 4 | 33) 5 |
| 4) 1 | 14) 1 | 24) 4 | 34) 2 |
| 5) 1 | 15) 2 | 25) 5 | 35) 4 |
| 6) 4 | 16) 4 | 26) 1 | 36) 4 |
| 7) 4 | 17) 5 | 27) 5 | 37) 3 |
| 8) 5 | 18) 3 | 28) 3 | 38) 2 |
| 9) 1 | 19) 5 | 29) 4 | 39) 4 |
| 10) 4 | 20) 2 | 30) 4 | 40) 3 |

**(40 x 1 = 40புள்ளிகள்)**

**வினா 1**

1) வெஸ்ஸகிரி
கிந்தகலை
(4 புள்ளிகள்)

2)
- அரச மரத்தடியில் காணப்படும் புத்தரின் ஓவியம்
- போதிசத்துவர் : புத்தராவதை காட்டும் ஓவியம் என்பது பரணவிதான அவர்களின் கருத்தாகும்.
- புத்தபெருமானின் உருவத்தின் பின்னால் அழகியதோரணம் செதுக்கல் முறையில் காட்டப்பட்டுள்ளது. அரச மரத்தின் இலைகள் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.
- புத்தரின் மார்ப்புப் பகுதியையும், அரச மரத்தினைமுழுமையாகவும் காட்டப்பட்டுள்ளது.
- புத்தபெருமானின் இருபக்கங்களிலும் மீசைதாடியுள்ளபிராமணர் வடிவங்கள் இரண்டு காணப்படுகின்றது.
- ஒரு பக்கத்தில் தண்டுடன் கூடிய தாமரை மலர்க்கொத்தை புத்தரின் பக்கமாக கையை உயர்த்திய படி பிராமணர்களை காட்டியுள்ளமை குறிப்பிடக்கூடியது.
- இவ் ஓவியங்கள் முகில் கூட்டங்களுக்குள் வரையப்பட்டுள்ளது.
- இவ்விடயத்தை மஞ்சுசிறி அவர்கள் "யக்ஷியர் சமூகத்திற்கு புத்தர் வருகை அளித்த காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றார். (6 புள்ளிகள்)

3) சிகிரிய ஓவியங்கள் காவியச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.
காவியத்தில் குறிப்பிட்ட பெண்ணின் சிறப்பியல் ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.
சிகிரியா பெண் ஓவியங்கள் கவிதைக்கு ஒப்பானது என்பர் இதற்கு காரணம் இந்தப் பெண்கள் இயற்கைத் தோற்றத்திலும் மிகையான அழகுடன் காட்டப்பட்டுள்ளனர். இப் பெண்களின் சிறுத்த இடை, பெருத்தமார்பகங்கள், மென் உதடுகள், நீண்ட அழகிய கண்கள் என்பன காவியங்களில் பெண்களை வர்ணிப்பதற்கு நிகரானது ஆகும் (10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

**வினா 2**

1. கல்விகாரை நின்ற புத்தசிலை
பொலநறுவை இலங்காதில விகாரை புத்தசிலை (4 புள்ளிகள்)


2. பார்வதிசிலை
- திரிபங்கநிலை
- நளினத்தன்மை வெளிப்படுத்தல்.
- உடலோடுஒட்டிய ஆடை.
- ஆபரணங்கள் அணிந்துள்ளநிலை.
- சிறுத்த இடையமைப்பு
- கையிலேதாமரைப்பூ (06 புள்ளிகள்)

3.
- தட்டையான முகம் அதன் மத்தியில் உயர்ந்தநீண்டநாசி, குறுகியநெற்றி, மெல்லிய உதடுகள், சிறிய உச்சிகுடும்பி.
- இல – 1 சிலையின் பின் பகுதியில் விமான வடிவமும் அவற்றிடையே சிறு பிரமான இருந்த நிலை புத்தர் சிலை அமைத்திருந்தல்.
- புத்தர் சிலையின் ஆசனத்தில் வஜிரகுறியீடு அமைந்திருத்தல்.
- புத்தர் சிலையுடன் தொடர்புபடுத்தி மகரதோரணம் அமைந்திருத்தல்.
- வித்தியாதாரக் குகையிள்ளபுத்தர் சிலையின் பின் பகுதியில் பிரம்ம, விஷ்ணு வடிவம் இணைத்திருத்தலும் முன் பகுதியின் இரு பக்கத்திலும் யாழி வடிவம் அமைந்திருத்தல்.
- இயற்கையான கற்பாறையின் அமைப்புக்கேற்ப புத்தர் சிலைகளை செதுக்குவதற்கு பயன்படுத்தி இருத்தல்.
- நின்ற சிலையில் திரிபங்க நிலை காணப்படல். (10 புள்ளிகள்)

**வினா 3**

1) சாதவனர்கள் /சுங்கர்கள் (4 புள்ளிகள்)

2) வரிப்படத்தின் உதவியுடன் விளக்க வேண்டும். (6புள்ளிகள்)



சாஞ்சி மகாதூபம் 120’ அடி குறுக்கு விட்டத்தைக் கொண்டதுடன், 54’ அடி உயரத்தைக் கொண்டது. இது நீர் குமிழ் (புபுலாக் கார) வடிவமைப்பைக் கொண்டுள்ளது. நிலமட்டத்தில் இருந்து 16’அடி உயரத்தில் சைத்தியத்தைச் சுற்றிச் செல்லக்கூடிய பிரதான சுற்றுப் பிரகாரம் அமைந்துள்ளது. இப்பகுதி ,,மேதிய’ என அழைக்கப்படும். இதைச் சுற்றி கற்கிராதிவேலி அமைக்கப்பட்டுள்ளது. சுற்று பிரகாரத்திற்கு (மேதிய) ஏறிச் செல்வதற்கு படிவரிசைகள் இரண்டு காணப்படுகிறது.

மேதியத்தின் மத்தியில் அண்டம்’ (கர்பய) அமைந்துள்ளது. தூபத்தின் மேல் கல்வேலியைக் கொண்ட,,சதுரக் கோட்டம்’காணப்படும். இது,,ஹர்மிகா’எனஅழைக்கப்படும். இந்த ஹர்மிகாவின் மத்தியில் (தூபத்தின் உச்சியில்) உச்சியில் கூராகவும்,எட்டு மூலைவடிவையும் கொண்டகம்பம் அமைந்து உள்ளது. இது,,யூபய’ என்றும் “ஜஸ்ரிய’ என்றும் அறியப்படும். ,,யூபய’த்தின் உச்சியில் வட்டமான தட்டை அமைப்புடைய கற் தகடுகள் மூன்று ஒன்றன் கீழ் ஒன்றாகக் காணப்படும். இவை கீழிருந்து மேலுக்கு சிறுத்துக் காணப்படும். இவை ,ஜத்திரய’ என அழைக்கப்படும்.

3)

- (ஜட்டிலதமனய) பிராமணர்களின் ஆவணத்தை அடக்குதல் எனப்படும் செதுக்கல் சாஞ்சிதோரணத்தில் தூணில் காணப்படுகிறது.
- இதில் புத்தர் சரிதையில் ஒரு நிகழ்வு வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- புத்தர் உருவில் தன்வேயிலுள்ள (ஜட்டிலர்) பிராமணர்களின் ஆரணியத்திற்கு செல்லுகின்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.
- அப்பொழுது புத்தர் பெருமான் கங்கையின் மத்தியில் அமர்ந்து இருக்கின்றார். அதில் புத்தர் பெருமானுக்கு பதிலாக சதுர வடிவமொன்றை குறியீடாகக் காட்டப்பட்டுள்ளது.
- (யட்டிலர்கள்) பிராமணர்கள் புத்தபெருமானை வணங்கி சரணடைகின்றனர்.
- இதில் புத்தபெருமானை அரச மரத்துகுறியீட்டின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

(10 புள்ளிகள்)

**வினா 4**

1. மகாகபி ஜாதகக் கதை, ருகுமிக ஜாதகக் கதை,சத்ததந்த ஜாதகக் கதை, ஏரபத்த ஜாதகக் கதை (4 புள்ளிகள்)
2. யட்சகிவடிவம்
   - பாரூத் கல்வேலித் தூண்களில் அழகான முறையில் யட்சகிவடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளது.
   - இவை முதல்த்தர சிற்பங்களாக கருதப்படுகிறது.
   - இவ்வுருவங்கள் மரக்கிளையை பற்றியவாறு காணப்படுவது.
   - பருத்தமார்பகம், சிறுத்த இடை போன்றவற்றால் பெண்ணழகு காட்டப்பட்டுள்ளது.
   - சிரியாதேவி என அழைக்கப்படும் யட்சகி வடிவம் அழகான படைப்பாக கருதப்படுவது.

(6 புள்ளிகள்)

3. ஜேதவனராமய பரிசலித்தல்.

- அபினேரு எனும் அரசன் புத்தபெருமானுக்கு ஜேதவனராமய பூங்காவை பரிசளித்தல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- வட்ட வடிவமான தளத்தினுள்ளே செதுக்கப்பட்டுள்ளது.
- சிறுபுடைப்புநுட்ப முறையில் யானைத்தந்த செதுக்கலை ஒத்தவளைவில் செதுக்கப்பட்டுள்ளது.
- இதில் புத்த உருவத்திற்கு பதிலாக அரச மரம் குறிப்பாக காட்டப்பட்டுள்ளது.
- தங்க நாணயத்தை வண்டியில் வந்து கொட்டுதல், பரவுதல் அபினேக அரசன் இரண்டு கைகளினாலும் ஜேதவனராமய பரசளித்தல் என்பன காட்டப்படுள்ளது. (10 புள்ளிகள்)

**வினா 5**

1. மென்கவுர் (Menkaure)
மைசெறினஸ் (Mycerinus) / கப்ரே (khafre)
குபு எனப்படும் சியொப்ஸ் (khufu / cheops)

(4 புள்ளிகள்)

2.

- மஸ்டபா எனப்படுவது இறந்த உடலை பாதுகாப்பாக மூடப்பட்டுநீள் சதுரவடிவில் மண் மேடை அமைக்கப்பட்டிருத்தல்.
  அதன் பின்னர் இதனை பாதுகாப்பதன் பொருட்டு நிரந்தரமான கட்டடம் இதனுடன் இணைப்பட்டது.
- மஸ்டபாவிற்குள்ளே இறந்த உடலை மாதிரியாகக் கொண்ட சிலையும் சுற்றவுள்ள சுவர்களில் சித்தரிங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சில மஸ்டபாவிற்கு தேவாலயமும் உள்ளது. “கா” எனக் குறிப்பிடப்படும் ஆத்மாவுக்காக பூஜை வழிபாடுகள் இங்கு நடைபெறும். (6புள்ளிகள்)

3. பாரம்பரிய மரபு ரீதியான எகிப்திய சிலைகள்

- கப்ரே
- ஸ்பீனிக்ஸ்
- ரகோடென் அரசனும் நேபேர்ட் அரசியும்
- ஸ்கிரைப் (கணக்காளர் /எழுத்தாளர்)
- இரண்டாம் ராம்சேஸ்

எகிப்திய சிற்பங்களில் காணப்படும் மரபு ரீதியான பண்புகள்

- விறைப்புத் தன்மை /கேத்திரகணிதப் பண்பு/செயல்பாட்டுத் தன்மை அற்றவை.
- நின்றநிலையில் காணப்படும் ஆண் உருவம் ஒரு பாதத்தைமுன்னால் வைத்தவாறுகாணப்படல்.
- சோடிவடிவங்களில் ஆண் உருவம் ஒரு காலைமுன்னால் வைத்தவாறும் பெண் வடிவம் இரு கால்களையும் சேர்த்துவைத்தவாறுகாணப்படல்.
- பெண் ஆணின் இடையை அனைத்தவாறுகாணப்படல்.
- ஆணின் வடிவிற்குகட்டையானஉடையும்,பெண் வடிவிற்குநீண்டஉடல் முழுவதும் மூடிய வகையில் உடைஅணிந்திருத்தல்.

- நேராகக் காணப்படும் முகத்தில் கண்கள் விழித்தவாறுகாணப்படல்.
- ஆண் வடிவங்களுக்குகடும் வர்ணத்தையும்,பெண் வடிவத்திற்குமென்மையானவர்ணத்தையும் பயன்படுத்தி இருத்தல்.
- எகிப்தியசிலைகள் நின்றநிலையிலும்,ஆசனத்தில் அமர்ந்தநிலையிலும்,முழங்கால் மடித்திருக்கும் நிலையிலும் நிர்மாணித்திருத்தல்.
- ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஆண்,பெண் வடிவங்கள் நேராகவும்,விறைப்பாகவும் காணப்படல்.

(10 புள்ளிகள்)

**வினா6**

1. பேசினில் குளிக்கும் பெண்
   பலேநடனஒத்திகை/நடனபாடல்
   தலைவாரும் பெண்கள் (4 புள்ளிகள்)

2. மடோனா ஓவியங்கள்
   - ரபாயல் சிறப்பானமடோனாஓவியங்களைவரைந்துள்ளார்.
   - சிஸ்ரைன் மடோனா,அல்பாமடோனா,புல் தரையில் மடோனாஎன்பவைஅவற்றில் சிலவாகும்.
   - இம் மடோனாஓவியத்தில் மேரிமாதாவின் முகத்தில் தாய் பாசஉணர்வையும்யேசுக் குழந்தையில் பிஞ்சுத் தன்மையையைசிறப்பாககாட்டியுள்ளார். (6 புள்ளிகள்)

3.
   - மறுமலர்ச்சிக்காலத்தில் இயற்கைத் தன்மையினை அதிகமாக காட்டி உள்ளனர்.
   - சம்பிரதாயகலைக்கும், மரபுரீதியான கோட்பாட்டுக் கலைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
   - அக்கால சிற்பிகள் வரலாற்று நிகழ்வுகளையும் சமயநிகழ்வுகளையும் கருப்பொருளாககொண்டுள்ளனர்.
   - வர்ணப் பாவனையின் போது சில முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.
   - நிர்வாணமான பெண் சித்திரத்தை வரைவதென்றால், வீனஸ் தெய்வத்தினை போன்ற தெய்வ உருவங்களை மட்டும் வரைய முடியும்.
   - 18ம் நூற்றாண்டின் போது ஓவியியல் வாதகலைஞர்கள் அல்லது மனப்பதிவாத கலைஞர்கள் வேறுநுட்ப முறைகளை பின்பற்றினர்.
   - சாஸ்திர ரீயான கோட்பாடுகளை பின்பற்றுவதை தவிர்த்து சுய ஆக்கங்களுக்குச் சென்றனர்.
   - கருத்தை தெரிவு செய்தல், வர்ணப் பயன்பாடு ஆகியன வேறுபட்டதால் மறுமலர்ச்சிக்கால நிர்மாணங்களிலிருந்து விலகிச் சென்றுள்ளது.
   - மனப்பதிவுவாதக் கலைஞர்களில் எட்காடெகா, க்ளாட்மனே, எட்வாட்மனே, கமில் பிசாரோ, பியேர் ஒகஸ்தேறெனோவா, அல்பிறட் சிஸ்லி ஆகிய கலைஞர்கள் ஒன்று பட்டனர்.
   - மனப்பதிவாத கலைஞரான எட்வேட் மனேயின் புல்வெளியில் மதியபோசனம் (The Lunchein on the Grass) என்னம் ஓவியம் சித்திரக் கலைக்கு சவாலாகஅமைந்தது.
   - இங்கு காணப்படும் நிர்வாண பெண் உருவம் சாதாரண பெண்ணாகும். சித்திரகலைஞருக்கு மாதிரியாக (Motel) உதவியவள் விபசாரியாவாள்.
   - இப்படியான பாத்திரங்களை நிர்மாண ஓவியமாக வரைவது மறுமலர்ச்சிக்கால கலைக்கு சவாலாக அமைந்துள்ளது என விமர்சனங்கள் கூறுகின்றனர். (10 புள்ளிகள்)